# பனிமயம்



சனவரி 2023


ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



உங்கள் அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

**2023** என்னும் புதிய ஆண்டு புலர்ந்திருக்கின்றது. நம் அனைவருக்கும் புதிய நம்பிக்கையையும், புதிய எதிர்பார்ப்புகளையும் தந்துள்ள ஆண்டு. ஆம், இந்த ஆண்டு நமது பேராலயப் பெருவிழா தங்கத் தேர்ப் பெருவிழாவாகக் கொண்டாடப்படும். பத்து ஆண்டு இடைவெளிக்குப் பிறகு, பேராலயத்தின் நெடிய வரலாற்றில் 16ஆவது முறையாகப் பனிமயத் தாய் தங்கத் தேரில் வலம் வரவிருக்கிறார்கள். அதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தங்கத் தேர் 216 ஆண்டுகள் பழமையானது என்பதால், சான்றோர்களின் ஆலோசனைப்படி, தேரின் அடிப்பகுதி புதியதாகவே செய்யப்படுகிறது. இத்திருப்பணிக்குத் தேவையான நன்கொடைகளைத் தாராளமாகத் தரும் அனைவருக்கும் அன்னையின் ஆசி நிறைவாகக் கிடைப்பதாக.

இப்புதிய ஆண்டில் பனிமயத் தாயின் பாதத்திலிருந்து உங்களுக்கு வாழ்த்துகளும், ஆசிகளும் அனுப்புகிறேன். “நீ உன் கடவுளாகிய ஆண்டவரை வழிபடவேண்டும். அவர் உன் உணவு, தண்ணீர் இவற்றின் மேல் ஆசி வழங்குவார். அவர் உன் நடுவினின்று நோயை அகற்றிவிடுவார்” (விப 23:25) என்னும் இறைமொழிக்கேற்ப, இந்தப் புதிய ஆண்டு உங்கள் அனைவருக்கும் ஆசிகள் நிறைந்த ஆண்டாக, நோயற்ற, நலம் நிறைந்த ஆண்டாக அமைய வேண்டுமென்று அன்னையை வேண்டுகிறேன்.

நம் அடைக்கலத் தாயான பனிமய அன்னை உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் ஆசியால் நிரப்புவாராக!

என்றும் அன்புடன்,

**அருள்பணி. குமார்ராஜா**

பங்குத் தந்தை & திருத்தல அதிபர்



உதயம் 23 தாரகை 5

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருட்பணி. குமார்ராஜா
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | |
|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

**கல்வியாளர்களுக்காக...**

கல்வியாளர்கள் நம்பத்தக்க சாட்சிகளாக, போட்டியைவிடச் சகோதரத்துவத்தைக் கற்பித்து, மிக இளையோருக்கும், எல்லாருக்கும் மேலாக மிகப் பலவீனமானவர்களுக்கும் உதவும்படியாக நாம் மன்றாடுவோம்.

# உள்ளே...

1. அகிடாவின் கண்ணீரின் அன்னை! ....................................4
அருள் மரி வேந்தன்

2. பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்..........6
செல்வராஜ் மிராந்தா

3. மரியன்னைப் புனிதர்கள் :
புனித ஜான் ஹென்றி நியூமன்..................................................8
அருள்பணி. குமார்ராஜா

4. உலக நாடுகள் எதிர்பார்த்திருந்த இயேசு! .........................10
கலாபன் வாஸ்

5. பனிமய அன்னை -
பனிமயம் பாடும் பாவலர்கள் ..............................................12
தி. சொர்ணராஜன் விக்டோரியா

6. நம் திருஅவை, நமது பெருமை
நேர்த்தியான நிறுவனம்!.......................................................14

7. விவிலியப் போட்டி .................................................................16

8. மாதம் ஒரு மாதா படம் ........................................................19

9. பனிமயப் பகிர்வு....................................................................20

10. பனிமய சாட்சியங்கள்..........................................................24

புதிய காட்சிகள் : 2

மரியன்னை மலர்கள் : 6

# அகிடாவின் கண்ணீரின் அன்னை!



லூர்து, பாத்திமா, மெஜுகோரே போன்ற புகழ்பெற்ற மரியன்னைத் திருத்தலங்கள் ஐரோப்பாவில் உள்ளன. மெக்சிகோவின் குவாடலுபே திருத்தலம் வட அமெரிக்காவில் உள்ளது. பிரசில் நாட்டின் அபரஜிதா திருத்தலம் தென்னமெரிக்காவில் உள்ளது. ஆப்ரிக்காவின் ஒரே காட்சித் திருத்தலம் ருவாண்டாவின் கிபேஹோவில் உள்ளது. அப்படியானால், ஆசியாவில் அன்னை மரியா காட்சி தரவில்லையா? என்னும் நியாயமான கேள்வி உங்கள் உள்ளத்தில் எழலாம்.

நானூறு ஆண்டுகளுக்கு முன் நம் அன்னை காட்சி தந்த வேளாங்கன்னி ஆசியாவில்தானே உள்ளது? இன்னொரு ஆசியத் திருத்தலம் ஜப்பான் நாட்டின் **அகிடா**. அதிலும் இங்கு அன்னை காட்சி தந்து ஐம்பது ஆண்டுகள்கூட ஆகவில்லை என்பது ஒரு வியப்பான தகவல்.

1973ஆம் ஆண்டு ஜப்பானின் அகிடாவின் கன்னியர் இல்லத்தில் **ஆக்னஸ் கட்சுகோ சாசகாவா** என்னும் அருள்சகோதரிக்கு அன்னை மரியா காட்சி தந்தார். உலகில் பாவம் பெருகுகிறது. எனவே, செபமும், தவமும் அதிகரிக்க வேண்டும் என்பதே அன்னை தந்த காட்சிகளின் மைய செய்தி.

சகோதரி ஆக்னசின் வாழ்வே வியப்பானதுதான். புத்த மதக் குடும்பத்தைச் சேர்ந்த சாசகாவா 1931ஆம் ஆண்டு குறைமாதக் குழந்தையாகப் பிறந்தவர். தவறான அறுவை சிகிச்சையின் காரணமாக பத்து ஆண்டுகள் நடக்க இயலாதவராக இருந்தார். கத்தோலிக்க அருள்சகோதரிகளின் பாதுகாப்பில் இருந்தபொழுது, கிறிஸ்தவ இறைநம்பிக்கையில் ஈடுபாடு கொண்டு, மறைக்கல்வி பெற்றார். தனது 33ஆவது வயதில் திருமுழுக்கு பெற்று கத்தோலிக்கர் ஆனார்.

சிறிது காலத்துக்குப் பின்னர், துறவியாக விரும்பி, ஆக்னஸ் என்னும் பெயரை ஏற்று “நற்கருணையின் அடியார்கள்” என்னும் மறைமாவட்ட துறவற சபையில் அருள்சகோதரி ஆனார், ஏற்கனவே, அவருக்கு கேட்கும் குறைபாடு இருந்தது. ஆனால், ஒரு கட்டத்தில் முழுக்க காது கேளாதவராகி விட்டார்.



எனவே, 1973ஆம் ஆண்டு அகிடா கன்னியர் இல்லத்திற்கு வந்து சேர்ந்தார். காது கேளாததால், முற்றிலும் அமைதியாக வாழ்ந்தார். உடன் வாழ்ந்த சகோதரிகளின் உதடு அசைவை வாசித்து அவர்களைப் புரிந்துகொள்ள முயன்றார். தனது முழு நேரத்தையும் இறைவேண்டலில் செலவழித்தார்.

இந்தப் பின்னணியில்தான் அவருக்குப் புதிய அனுபவங்கள் கிடைத்தன. 1973 மே 12ஆம் நாள் கன்னியர் இல்ல சிற்றாலயத்தின் நற்கருணைப் பேழையிலிருந்து பேரொளி தோன்றியது. ஆக்னஸ் தெண்டனிட்டு வணங்கி செபிக்கத் தொடங்கினார். இந்த ஒளி அனுபவம் ஒரு மணிநேரம் நீடித்தது. தொடர்ந்து மறுநாளும், அதன் பின்னர் வேறு நாள்களிலும் ஆக்னஸ் நற்கருணை ஆண்டவரின் பிரசன்னத்தை இந்த ஒளியில் உணர்ந்தார்.

அதே ஆண்டு ஜூன் 28ஆம் நாள் சகோதரி ஆக்னசின் இடது கையில் வலியும், இரத்தமும் தோன்றின. இயேசுவின் துன்பத்தில் அவரும் பங்குபெறும் "திருக்காய வரம்" என்பது அப்போது அவருக்குத் தெரியவில்லை. ஆனால், இந்த அனுபவம் அடிக்கடி நேர்ந்தது. குறிப்பாக, வியாழக்கிழமைகளில் தொடங்கி, வெள்ளிக்கிழமைகளில் வலி உச்சத்தை அடைந்து, ஞாயிற்றுக்கிழமைகளில் அடியோடு மறைந்துவிட்டது.

அதன் பின்னர், ஆக்னசின் காவல் தூதர் அவருக்குத் தோன்றி அவரைத் தேற்றினார். உலகின் பாவங்களுக்குப் பரிகாரமாக அவர் துன்பங்களை ஏற்க வேண்டும், செபிக்க வேண்டும் என்று கூறினார்.

1973 ஆகஸ்ட் 3 முதல் அன்னை மரியா ஆக்னசுடன் பேசத் தொடங்கினார். சிற்றாலயத்தில் மரத்தால் ஆன மரியன்னையின் சுருபம் ஒன்று இருந்தது. அந்தத் திருவுருவத்திலிருந்து ஆக்னஸ் அன்னை மரியாவின் குரலைக் கேட்கத் தொடங்கினார். செபம், தவம், பாவப் பரிகாரம் போன்ற செய்திகளே மீண்டும் தரப்பட்டன. ஒவ்வொரு முறையும் சபையின் நிறுவனரான **ஆயர் ஈட்டோ** அவர்களிடம் இந்தச் செய்திகளைப் பகிர்ந்தார் சகோதரி ஆக்னஸ்.

தொடர்ந்து, அன்னையின் சுருபத்திலிருந்து கண்ணீர் வடியத் தொடங்கியது. 1975 முதல் 1981 வரை அன்னையின் திருவுருவம் 101 முறை கண்ணீர் சிந்தியதாக ஆவணப்படுத்தப் பட்டுள்ளது. 1973 டிசம்பர் மாதத்தில் அன்னையின் திருவுருவத்திலிருந்து கண்ணீர் வடிந்ததை ஒரு தொலைக்காட்சி பதிவு செய்து ஒளிபரப்பியது. இதனால், ஜப்பான் நாடு முழுவதும் இந்தச் செய்தி பரவியது. இந்தக் கண்ணீர் பஞ்சில் தோய்க்கப்பட்டு ஆய்வுக் கூடம் அனுப்பப்பட்டது. இது மனிதக் கண்ணீரே என்றன ஆய்வு முடிவுகள்.

அன்னையைக் காட்சியில் கண்ட பின் சகோதரி ஆக்னசுக்கு இருந்த காது கேளாமை அற்புதமாகக் குணமாகியது. அகிடாவுக்கு மக்கள் திரண்டு வரத் தொடங்கினர். 1981ஆம் ஆண்டு மூளைப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட **தெரசா சுன்** என்னும் 43 வயது பெண் முற்றிலும் குணமடைந்ததே அங்கு நிகழ்ந்த முதல் புதுமை.

ஆயர் ஈட்டோ இந்தப் புதுமையை ஏற்பிசைவு செய்ததுடன், 1984ஆம் ஆண்டு அகிடாவைத் திருத்தலமாக அறிவித்தார். இப்போது அகிடா திருஅவையால் ஏற்பிசைவு செய்யப்பட்ட ஒரு மரியன்னைத் திருத்தலமாகத் திகழ்கிறது.

அகிடாவில் தோன்றிய அன்னையின் செய்தியும், பாத்திமாவில் காட்சி தந்த அன்னையின் செய்தியும் ஒன்றே: மனம் மாறுங்கள். செபியுங்கள். செபமாலையைத் தியானியுங்கள். உலகின் பாவங்களுக்குப் பரிகாரம் செய்யுங்கள் என்பவையே இரண்டு காட்சிச் செய்திகளின் சுருக்கம்.

அன்னையின் வேண்டுகோளை அனைவரும் ஏற்போமாக!

**அருள் மரி வேந்தன்**



# 20 பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்...

அருள்தந்தை பவுல் ராபின்ஸ்டன் 1995ஆம் வருடம் முதல் 2000மாவது ஆண்டு வரை தூய பனிமய அன்னை ஆலய பங்குத் தந்தையாகவும் பசிலிக்கா அதிபராகவும் பணியாற்றினார்கள். எளிமையான வாழ்வும் இசை ஞானமும் கொண்ட அருட்தந்தையின் காலத்தில் மாண்புமிக்க அவரது மனதைக் கலக்கிய சில அசம்பாவிதங்கள் நடந்தன.

அருள்தந்தை எஸ்.எம். தல்மெய்தா காலத்தில் தொடங்கி வைக்கப்பட்ட தூய சகாயமாதா பக்தி முயற்சிகள் பங்கு மக்களிடையே மிகுந்த பக்திப் பற்றுதலைப் பெறவே, நன்றியறிதல் காணிக்கைகள் சில தங்க ஆபரணங்களாக சகாய அன்னையின் படத்தை அலங்கரிக்க ஆரம்பித்தன. வேண்டுதல்கள் நிறைவேறியதன் நன்றியறிதல்களாக மக்களால் சூடப்பட்டவை அவை.

மற்ற உள்நாட்டு ஊர்களைப் போலல்லாது அதிகாலை முதல் திருப்பலிக்குத் திறக்கப்படும் பனிமய அன்னையின் ஆலயம் மதியம் வரை திறந்திருக்கும். ஒருமணி நேரம் அடைக்கப்பட்டு மீண்டும் திறக்கப்படுவது இரவு 8 அல்லது 8.30 மணி வரை திறந்தே இருக்கும். காரணம், எப்போதும் சிலர் நற்கருணை சந்திப்பதற்கும் ஜெபமாலை ஜெபிப்பதற்கும் செல்வதுதான். அதுவுமல்லாமல், இந்து சகோதரர்கள் பலர் வந்து தரிசித்துச் செல்வர்.

பலர் தங்கள் பக்தியின் வெளிப்பாடாக சுருபங்களையும் படங்களையும் முத்திசெய்வது வழக்கம். ஒருநாள் அவ்வாறு தூய சகாய அன்னையின் படத்தை முத்தி செய்யச் சென்றவர்கள் அன்னையின் படத்தை அலங்கரித்திருந்த தங்க ஆபரணங்கள் எல்லாம் அகற்றப்பட்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்து அருள்தந்தையிடம் ஓடிப் போய் சொல்லியிருக்கிறார்கள். செய்தி பரவி ஆட்கள் கூடி விசாரிக்கவே ஆபரணங்கள் காணாமல் போனது அம்பலமானது. தெய்வ சந்நிதியிலும் திருட்டா? அருள்தந்தை ஆடிப்போய்விட்டார்கள்.

தான் அளவற்ற பக்திப் பற்றுதல் கொண்டிருந்த அன்னையின் திருத்தலத்தில் அமைதியான முறையில் பணியாற்ற ஆவலோடு பொறுப்பேற்றிருந்தபோது இதுபோன்ற அசம்பாவிதங்கள் நடந்தேறியதைக் கண்டு மனம் வெதும்பினார்கள். என்ன செய்ய? - எல்லா மனிதர்களும் மனிதர்களாக வாழ்வதில்லையே - என்ற அங்கலாய்ப்பு! ஆதங்கம்!! அவரால் இயன்ற அளவு சுமூகமாகவே நாட்களை நகர்த்திக் கொண்டிருந்தார். மக்களும் நல்ல ஒத்துழைப்பையே நல்கிக் கொண்டிருந்தனர். ஓரிரு ஆண்டுகள் கடந்தன.... பிரச்சனைகள் இல்லாமல்!

அதற்கிடையில் 2000ஆவது ஆண்டு பிறப்பையும் அவ்வருடத்தில் பனிமய அன்னையின் பெருவிழாவினையும் எவ்வாறு கொண்டாடுவது என்ற வினா எழுந்து விவாதப் பொருளாகியது. எதிர்பார்த்தது போலவே பனிமய அன்னையின் விழாவை அலங்காரத்





தேர்த் திருவிழாவாகக் கொண்டாட வேண்டும் என ஏகோபித்த முடிவு எடுக்கப்பட்டது.

அதற்கு இடைப்பட்ட காலத்தில் அன்னையின் பெருவிழா வெகு ஆடம்பரமாக வழக்கம்போல் நடைபெற்றுக் கொண்டிருந்த போது பெரும் அதிர்ச்சியூட்டிய ஒரு சம்பவம் மக்களைக் கிளர்ந்தெழச் செய்தது. விழா நாட்களிலே ஆலய வளாகத்தைச் சுற்றி காவல் துறையின் கண்காணிப்பு கடுமையாக இருக்கும். ஒரு காவல் நிலையமே ஆலய வளாகத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கும். அதுவுமல்லாமல், அன்னையின் திருச்சுரூபத்தில் சூடப்பட்டிருக்கும் தங்க கிரீடம் மற்றும் அணியப்பட்டிருக்கும் விலை உயர்ந்த ஆபரணங்களுக்குக் காவலாக அமலோற்பவ மாதா சபை வாலிபர்களும் உறுப்பினர்களும் ஆலயத்தின் தூயகத்தைச் சுற்றி காவலுக்குப் படுத்திருப்பார்கள். அவற்றையெல்லாம் தாண்டி அன்னையின் தங்க ஆபரணங்கள் ஓர் இரவில் களவாடப் பட்டன. செய்தியறிந்ததும் ஊரே கொதித்து எழுந்தது.

பேரதிர்ச்சிக்குள்ளான அருள்தந்தை பாவுல் ராபின்ஸ்டனுக்கு இதயம் பாதிக்கப்பட்டது. தாங்க முடியாத மனஅழுத்தம்! என்ன செய்வார்!! பாவம்!

ஏ.வி.எம். மருத்துவமனை தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு மருத்துவர்கள் உதவியுடன் நலம் பெற்றுத் திரும்பினார். அவர் படுத்து ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தபோது அருள்தந்தை ஸ்டீஃபன் கோமஸ் பார்க்கச் சென்றிருக்கிறார்கள். அருள்தந்தை கோமஸ் ஒரு எழுத்தாளரும், பாடல் எழுதுபவருமாவார். அருள்தந்தை ராபின்ஸ்டன் ஒரு நல்ல இசைக் கலைஞர். இருவரும் சந்தித்தபோது, அருள்தந்தை ராபின்ஸ்டன் இசையமைக்க அருள்தந்தை கோமஸ் இசைக்கேற்ற சொற்கோர்த்து, பாடலாகப் பிறந்ததுதான்,

“சென்றுவா கிறிஸ்தவனே – நீ

வென்றுவிட்டாய் உன் விசுவாசத்தால்”

உள்ளிட்ட அடக்கச் சடங்கின் பாடல்கள். காலத்தைக் கடந்து ஒவ்வொரு இறுதிப் பயணத்திலும் இன்றுவரை பாடப்படுகின்றன.

அப்பாடலைக் கேட்கும்போதெல்லாம் நினைவுக்கு வருவது இரண்டாம் உலகப்போர் முடிந்து ANSAC Regement என்றழைக்கப்பட்ட ஆஸ்திரேலிய நியூசிலாந்து படைவீரர்கள் போர்க்களத்திலிருந்து நாடு திரும்பும்போது கப்பலில் வைத்து படைகளின் Band Master எழுதி இசையமைத்த

“Coming Home Coming Home

Lord I am Coming Home” என்ற ஆங்கிலப் பாடல்தான். இலங்கையிலும் மற்றும் ஆங்கில மொழியில் இறுதிச் சடங்குகள் நடைபெறும் ஏனைய நாடுகளிலும் இன்றுவரை காலத்தை வென்று பாடப்படுவது.

தொடரும்...



**செல்வராஜ் மிராந்தா**

61 மரியன்னைப் புனிதர்கள்

# புனித ஜான் ஹென்றி நியூமன்

(1801 - 1890)

## ஆங்கிலிக்கன் திருஅவையில் பிறந்து அன்னையைப் பற்றிக்கொண்டவர்



1950ஆம் ஆண்டு மரியாயின் விண்ணேற்பு ஒரு நம்பிக்கைப் பேருண்மையாக அறிவிக்கப்பட்டபோது, இங்கிலாந்தின் ஆங்கிலிக்கன் ஆயர்கள் இணைந்து ஓர் அறிக்கையை வெளியிட்டார்கள். இந்த அறிவிப்பின் வழியாக கத்தோலிக்கத் திருஅவை கிறித்தவ ஒன்றிப்புக்கெதிராக செயல்பட்டுவிட்டது என்று குற்றம் சாட்டினார்கள்.

ஆனால், பல ஆண்டுகளுக்கு முன்னரே ஆங்கிலிக்கன் திருஅவையில் பிறந்து, கத்தோலிக்கத் திருஅவையில் இணைந்த ஓர் ஆங்கிலேயர் அவர்களுக்குப் பதில் கொடுத்துவிட்டார். அவர்தான் 19ஆம் நூற்றாண்டின் இணையற்ற சிந்தனையாளர் எனப் போற்றப்படும் கர்தினால் **ஜான் ஹென்றி நியூமன்.**

ஆங்கிலிக்கன் திருஅவையின் தலைமை இடமான இங்கிலாந்தில் கத்தோலிக்கத் திருஅவையின் கோட்பாடுகளையும், பக்தி முயற்சிகளையும், சிறப்பாக மரியன்னை பக்தியையும் இறையியல், மெய்யியல், விவிலிய அடிப்படையில் எண்பித்த பெருமை நிச்சயம் அவரையே சேரும்.

இறையியலாளர், கல்வியாளர், சிந்தனையாளர், மெய்யியலாளர், பல்திறனாளர், வரலாற்று வல்லுநர், எழுத்தாளர், கவிஞர் என இவருக்குப் பல முகங்கள் இருக்கின்றன. “ஒளியே வழி நடத்து” (Lead Kindly Light) என்னும் புகழ்பெற்ற பாடலை இயற்றியவர் இவரே.

1801ஆம் ஆண்டு இங்கிலாந்தில் பிறந்த நியூமன் முதலில் ஆங்கிலிக்கன் திருஅவையில் குருவாகப் பணியாற்றினார். இங்கிலாந்தின் புகழ்பெற்ற ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பயின்று அங்கேயே கல்வியாளரானார். கத்தோலிக்கத் திருஅவை பற்றிய ஆய்வில் ஈடுபட்ட “ஆக்ஸ்போர்ட் இயக்கத்தின்” முதன்மைத் தலைவர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். தம் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் துறந்து கத்தோலிக்கத் திருஅவையில் இணைந்தார்.

1879ஆம் ஆண்டு திருத்தந்தை 13ஆம் லியோவால் கர்தினாலாக உயர்த்தப்பட்டார். விவிலியத்தை ஆங்கிலத்தில் மறுமொழிபெயர்ப்பு செய்தார். இலக்கியப் பணிகள் செய்தார். கத்தோலிக்க நம்பிக்கை, வழிபாடுகள், பக்தி முயற்சிகள் பற்றி ஏராளமாக எழுதினார், போதித்தார். 1890ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார். கடந்த

2019ஆம் ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் புனிதர் என அறிவிக்கப்பட்டார். மரியன்னைமீது மிகுந்த பற்று கொண்டவர் என்பது இவரது கூடுதல் சிறப்பு.

கர்தினால் நியூமன் மரியன்னை பற்றி எழுதியவை அனைத்தும் தொகுக்கப்பட்டு "மறைபொருளான ரோஜா" என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டன. இந்நூலில் மரியியல், மரியன்னை பக்தி இரண்டும் காணப்படுகின்றன. மரியன்னைமீது உண்மையான பக்தி இருக்க வேண்டும் என்றால், மரியன்னை பற்றிய இறையியலை நாம் அறிந்திருக்க வேண்டும். எனவேதான், இரண்டையும் கலந்து எழுதினார் நியூமன். மரியன்னையின் சிறப்புப் பெயர்கள் - ஞானத்தின் இருப்பிடம், விடியற்காலத்தின் விண்மீன் - போன்றவற்றை விரிவாக விளக்கி எழுதினார் நியூமன். இறைவாக்கினர் எசேக்கியேலை மேற்கோள் காட்டி, மரியா விண்ணகத்தின் வாயில் என்று எழுதினார் நியூமன்.

நியூமனின் மரியன்னை பக்தியில் செபமாலைக்கு முக்கிய இடமிருந்தது. "நிறைவின் குறுக்கு வழி" என்னும் நூலில் நிறைவடைவதற்கான வழிகளாகப் பின்வருவனவற்றைப் பரிந்துரைக்கிறார்: "அதிகாலையிலேயே படுக்கையை விட்டு எழவேண்டும். முதல் சிந்தனையை இறைவனுக்குக் கொடுக்க வேண்டும். நற்கருணை ஆண்டவரைச் சந்திக்க வேண்டும். மூவேளை வேண்டலை மன்றாட வேண்டும். கடவுளின் மாட்சிக்காக உணவு உண்ண வேண்டும். செபமாலையை நன்கு செபிக்க வேண்டும். தீய எண்ணங்களைப் புறக்கணிக்க வேண்டும். அன்றாடம் ஆன்ம சோதனை செய்ய வேண்டும். நேரத்தோடு படுக்கைக்குச் செல்ல வேண்டும். அப்போது நீங்கள் நிறைவாழ்வு வாழ்ந்தவராவீர்". எப்படி? நாமும் இதனை எளிதாகப் பின்பற்றலாமே?

நியூமனுக்கு வயது முதிர்ந்த காலத்தில் கண் பார்வைக் குறைந்தபோது, திருப்பலி நிறைவேற்ற இரண்டு திருப்பலி மன்றாட்டுகளை மனப்பாடம் செய்தாராம். ஒன்று மரியன்னைக்கான திருப்பலி, இரண்டாவது இறந்தோருக்கான திருப்பலி. அத்துடன், கட்டளை செபத்துக்குப் பதிலாக செபமாலை செபித்தாராம். செபமாலையின் சிறப்பே அது கிறித்தவ நம்பிக்கையை செபமாக மாற்றுகிறது என்று அவர் கற்பித்தார்.

எழுதிக்கொண்டோ, பேசிக்கொண்டோ இல்லாத நேரங்களில் அவருடைய கைகளில் செபமாலைதான் இருந்தது. செபமாலை என்பது நற்செய்தி நூல்களின் தியானம் என்பது அவரது கருத்து.

எல்லா மரியன்னைப் புனிதர்களைப் போலவே, கர்தினால் நியூமனும் அன்னை மரியாவுக்குப் பல மன்றாட்டுகளை இயற்றினார். இதோ, புகழ்பெற்ற ஒரு மரியன்னை மன்றாட்டு:

"ஓ இயேசுவின் தாயே, என் தாயே, நான் உம்மையே பற்றிக்கொண்டு உம்மை அன்பு செய்ய அருளும். எனக்கு உமது பரிவு தேவை. எனவே, உமது தாய்மையின் பாதுகாப்பை எனக்குத் தாரும். இயேசு என்னில் விரும்புவதைச் செய்ய எனக்கு உமது உதவி தேவை. உமது மாசற்ற இதயம் என்னை இயேசுவின் திரு இதயத்திடம் கையளிக்கும் அந்த இறுதி நாள் வரையில், உமது தாய்மையின் ஆசிகளை நாள்தோறும் எனக்குத் தாரும்." என்னே அருமையான மன்றாட்டு!

முன் எப்போதையும்விட நமது காலத்தில் புனித ஜான் ஹென்றி நியூமனின் தேவை அதிகமாக இருக்கிறது. நமது கத்தோலிக்கத் திரு அவையின் வழிபாடுகளும், மரியன்னை பக்தியும் வெறுமனே உணர்வின் சடங்குகள் அல்ல, மாறாக விவிலியம், இறையியல் சார்ந்த மறையுண்மைகளின் வெளிப்பாடு என்பதை உணர இப்புனிதரின் எழுத்துகளும், போதனையும், வாழ்வும் சான்றுகளாக உள்ளன.



அருள்பணி. குமார்ராஜா

# உலக நாடுகள் எதிர்பார்த்திருந்த இயேசு!



**‘வா**க்களிக்கப்பட்டவரின் வருகைக்காக’ - ஒன்றிற்கு மேற்பட்ட கலாச்சாரம் காத்திருந்தது.

பழைய ஏற்பாட்டுக் காலத்து இறைவாக்கினர் முன்னுரைத்த ‘மீட்பர்’ இயேசுக் கிறிஸ்துதான் என்பதைத் திருச்சபை ஏற்றுப் போற்றுகிறது. இதே வேளையில், எல்லா நாடுகளிலும் ஆவலோடு எதிர்பார்க்கப் பட்டவர் இதே இயேசுதான் என்பதையும் திருச்சபை சுட்டிக்காட்டுகிறது.

இயேசு பிறந்தபோது, மேற்கு ஐரோப்பாவிலிருந்து, இந்தியாவில் சிந்து நதிக்கரை வரை, உரோமைப் பேரரசின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது -அமைதியைக் காத்து வந்தது.

மாவீரன் அலெக்சாண்டரின் வெற்றியின் காரணமாக நாடுகளிடையே கலாச்சாரப் பரிவர்த்தனை முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே நடைபெற்றிருந்தது.

மக்களிடையே ஆன்மீகத் தாகம் தலைதூக்கி நின்றது. ஏழை எளிய மக்களுக்கு இறைவன் செவிமடுக்கிறார் என்பதை மக்கள் நம்பினர். இரக்கத்தையும் நீதியையும் இறைவன் பகிர்ந்து அளிக்கிறார் - மீட்பளிக்கிறார் என்பதில் உறுதியாயிருந்தனர். இறைவனின் குறுக்கிடுதலினால், உரோமையரின் ஆட்சியிலிருந்து விடுபட்டு, மனநிறைவு பெறுவோம் என்றும் பல நாட்டினர் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஒரு தீவினைக்குப் பின், ஒரு நல்ல காலம் பிறக்கும் என்று பாபிலோனிய மக்கள் காத்திருந்தனர். மெசியாவின் காலம் கனிய வருகிறதென்றும், ஒரு மீட்பர் வரவிருக்கிறார் என்றும் எதிர்நோக்கினர்.

அனைவராலும் அன்புடன் ஏற்றுக் கொள்ளக் கூடிய பேரரசர் வரவிருக்கிறார் - எதிரிகளை வீழ்த்தும் மாவீரராக இருப்பார் - தங்கள் நாட்டின் கருவூலங்களையும் கலைப் பொக்கிஷங்களையும் கொள்ளையடித்துச் சென்ற பகை நாட்டினரிடமிருந்து அவற்றையெல்லாம் மீட்டுக் கொண்டு வருவார் என்று **எகிப்திய மக்கள்** ஆவலுடன் காத்திருந்தனர். மிக மகிழ்ச்சியான எதிர்காலம் தங்களுக்கு வரவிருப்பதாக நம்பினர்.

**சோரோஸ்டர்** போன்றதொரு கதாநாயகன் - அறிவாளிக்காகக் காத்திருந்தனர். எல்லா உயிரினங்களையும் பரிவுடன் நோக்கி, அவர்களையெல்லாம் ஒருங்கிணைப்பார் - இறந்தவர்களுக்குப் புத்துயிரளிப்பார் - இறையரசை நிறுவுவார் என்றெல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர் **பெர்சிய மக்கள்**.

**பழங்கால ரோமானியர்களும்** ஒரு மீட்பரை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர்.

“கீழ்த்திசை செல்வாக்குப் பெறும்.... யூதேயாவிருந்து உலகை ஆளும் பெருமான் உருவாவார் என்று பெரும்பாலான மக்கள் நம்பிக் கொண்டிருக்கின்றனர்” - என்று வரலாற்று **ஆசிரியர் டசிடஸ்** கூறுகிறார்.

“இதுவரைச் சொல்லப்பட்டுள்ள இறைவாக்கின் அடிப்படையில், யூத இனத்தினர் மிகுந்த செல்வாக்குப் பெறுவார்கள் என்ற நம்பிக்கை கீழ்த்திசையில் பரவியுள்ளது” என்று மற்றொரு **ரோமானிய ஆசிரியர் சுட்டோனியஸ்** கூறுகிறார்.

மேற்குத் திசையிலிருந்து ஒரு பெரிய ஞானி வருவார் என்று **சீன மக்களும்** நம்பிக்கை கொண்டிருந்தனர். சீனர்களின் புனிதப் புத்தகங்களில், மேற்குத் திசையில் இருந்து மாபெரும் புனிதர் வருவார் என்றும், அவருடைய சமயம் சீன தேசத்திலும் பரவலாக்கப்படும் என்றும் எழுதப்பட்டிருந்தது.

**ஜெர்மனியப் பழங்குடி மக்கள்,** இந்த உலகம் ஒரு முடிவுக்கு வரும்... அதன்பின், மகிழ்ச்சியான காலம் பிறக்கும் என்று எதிர்பார்த்திருந்தனர்.



மேற்குத் திசையிலிருந்து வரவிருக்கும் ஒரு புனிதருக்காக **கிரேக்க மக்களும்** ஆவலுடன் காத்திருந்தனர்.

**சிசெரோ** கூறியதுபோல், 'புனிதமான' ஓர் அரசின் வருகையை எதிர்பார்த்தனர் கிறிஸ்து கால ரோமானியர்கள். **பெருங்கவிஞர் வேர்ஜில்** கூற்றுப்படி, அளவுக்கதிகமான எதிர்பார்ப்புகளுடன் இருந்தனர்.

கிறிஸ்து பிறப்பிற்கு முன் 42-37 ஆண்டுகளுக்கிடையே கவிஞர் வேர்ஜில், மேய்ப்புப் பணி சார்ந்த பத்துப் பாடல்களை இயற்றினார்.

"விண்ணிலிருந்து வந்த ஒரு தேவ மைந்தன்,
உலகிற்கு அமைதியையும், பொற்காலத்தையும்
கொண்டு வருவார்."

என்று தமது நான்காவது பாடலில் கூறியுள்ளார்.

★ ஒரு கன்னித்தாய் புன்முறுவலுடன் தனது குமாரனை நோக்குவார். அவர் வருகைக்குப் பிறகு, இரும்புக் காலம் முடிவுக்கு வரும். இந்தக் குழந்தையின் தொட்டில், வளமார் கொம்பு வடிவில் புனையப்பட்ட அழகுக் கலமாயிருக்கும். அவரது வருகையினால், மக்களினம் அச்சத்திலிருந்து விடுபடும் என்றெல்லாம் வேர்ஜில் கூறியுள்ளார். இந்த முன் அறிவிப்பு இயேசு பாலனைத்தான் குறிப்பிடுகிறது என்பதைக் கிறிஸ்தவர்கள் புரிந்து கொள்வர். **எசாயா** இறைவாக்கினர் போல், **'எம்மானுவேல்'** பிறப்பை இவரும் பல ஆண்டுகளுக்கு முன்னரே எடுத்துரைத்ததால், இவரையும் ஓர் இறைவாக்கினர் என்றே சில திருச்சபைத் தந்தையர்கள் கூறுவர்.

இயேசு பாலனை - **'யூதர்களின் அரசரை'**ச் சந்திக்க வந்த ஞானிகள்கூட, உலக மக்களின் ஆவலுக்கு ஓர் எடுத்துக்காட்டு. கீழ்த்திசையில் இருந்து வந்த வான்வெளி நிபுணர்கள் அவர்கள். இயேசு பிறப்புக் காலத்தையொட்டி, வரவிருக்கும் பேரரசர் - **மெசியா**வின் பிறப்புக் குறிப்புச் சாதகம் நாடுகளெங்கும் பரவியிருந்ததாகச் சொல்லப்படுகிறது.

கீழ்த் திசையிலிருந்து குழந்தை இயேசுவைக் காணச் சென்றவர்கள் மூன்று பேர் என்று பாரம்பரியமாகச் சொல்லப் பட்டாலும், திருச்சபையின் வரலாற்றில் அந்த ஞானியர்களின் எண்ணிக்கை 12 என்று காணக்கிடக்கிறது. அவர்கள், **மெசபட்டோமியா**வின் பழங்காலக் குருமரபினர் என்று நம்பப்படுகிறது.

யூத சமுதாயத்தினரின் எதிர்பார்ப்புகளின் அடிப்படையிலேயே **'மெசியா'** (மீட்பர்) - **'அரசர்'** என்ற கருத்து நிலவியது. இயேசு பிறப்பிற்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர்தான், எபிரேய மொழியிலிருந்து கிரேக்க மொழிக்கு விவிலியம் மொழி பெயர்க்கப்பட்டது. எனவே, கிரேக்க மக்களிடையேயும் மீட்பரின் வருகையை எதிர்நோக்கும் துடிப்பு உண்டாயிற்று.

இவையனைத்துமே, கடவுளின் திட்டத்தை நமக்கு வெளிப்படுத்துகின்றன. ....எல்லா வற்றையுமே கிறிஸ்துவை முன்னிலைப் படுத்தியே கடவுள் படைத்துள்ளார்.

இறைமகன் இயேசுவின் வருகையினால் அவரின் வாழ்க்கையும், மதிப்பீடுகளும் நமக்கு உறுதுணையாயிருக்க வேண்டும். மெல்லிய பூங்காற்றானாலும் - பெரிய சூறாவளியானாலும் - விண்வெளிக் கோளங்களானாலும், அனைத்தையும் ஒரு சீராக இயக்குபவர் இயேசு.

இயேசுவின் பிறப்பைக் கொண்டாடும் இவ்வேளையில் - புதியதோர் ஆண்டில் வாழப்போகும் காலத்தில், ஊனும் உடலுமாக - சதையும் இரத்தமுமாக - மனித அவதாரத்துடன் நம்முள் இயேசுவை நாம் எதிர்பார்ப்பதைவிட, நமது உயிரின் உயிராக அவர் நம்மில் செயல்படுவதைத்தான் நாம் கண்டுணர வேண்டும். இதை நாம் உணருவோமானால், நமது வாழ்வில் அந்த அனுபவத்தைப் புகுத்த முடியும். நல்லன செய்ய முடியும். ஞானிகள் திருக்குழந்தையைத் தரிசித்ததுபோல, நாமும் மனுமகனைப் பார்க்க முடியும். இயேசுவின் திருவருகைக்காகக் காத்திருந்த பல்வேறு நாடுகளைப்போல, நாமும் மனநிறைவு காண இயலும்.

நம் இதயத்திலும் இல்லத் திலும் இயேசு குடிகொள்வார்.



**கலாபன் வாஸ்**
94863 90793

பனிமய அன்னை 27

# பனிமயம் பாடும் பாவலர்கள்

**பனிமயம் பாடும் பாவலர்கள்**

தென்கிழக்கு கடலோர மீனவர்கள் கிறித்தவம் தழுவியபின், அன்னை மரியாளை தங்கள் அம்மன் ஆக, அம்மையாக கருதினார்கள். 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த மணப்பாடு **அந்தோனிக்குட்டி அண்ணாவியார்**, அன்னை மரியாளை **'அம்மை'** என்று அழைத்துப் பாடினார். அவர் காலத்தில் **'பனிமய அன்னை'** என்ற பெயர் பரவலாக அறியப்படவில்லை என்று கொள்ளலாம். **'இரக்கத்தின் மாதா'** என்றே அன்னை மரியாள் அழைக்கப்பட்டார்.

**19-ஆம், 20-ஆம் நூற்றாண்டுகளில் :**

1. தூத்துக்குடி - பாவலர் M.J. முத்தையா பர்னாந்து
2. தூத்துக்குடி - கவிஞர் அருள்திரு. பிரான்சிஸ் முறாய்ஸ் சே.ச.
3. தூத்துக்குடி - பாவலர் T. சேசையா வாஸ்
4. புத்தன்துறை - பாவலர் M.A.S.A.முறாய்ஸ்
5. கொழும்பு - பாவலர் A.P.V.கோமஸ்
6. தூத்துக்குடி - பாவலர் D. தாமஸ் வாஸ்
7. உடன்குடி - வித்துவான் J.M. விக்டோரியா
8. இலங்கை - பேசாலை ச. தாவீது பீரிஸ் அண்ணாவியார்
9. அமலிநகர் - பாவலர் C. ஜேம்ஸ் ராஜநாயகம்
10. சிப்பிகுளம் - பாவலர் மாறன்

என்று பனிமயம் பாடிய பாவலர் வரிசை நீள்கிறது!

இப்பாவலர்களில் ஒன்றிரண்டு பேர் தவிர மற்ற அனைவருமே யாப்பிலக்கணத்தின்படி பாடியவர்களே. புலவர்கள் அரசர்களையோ, தெய்வங்களையோ புகழ்ந்து பாடும்போது உயர்வு நவிர்ச்சி அணியில் பாடுவது தமிழ் இலக்கிய மரபு. அவ்வாறே கடலோரக் கவிஞர்கள் அன்னை மரியாளைப் பாடும்போது, தங்களின் முன்னாள் சமய பாரம்பரியத் தாக்கங்கள், தங்கள் பாடல்களிலும் படிவதைத் தவிர்க்க முடியாததாகிவிடுகிறது.

இதனால் பனிமயம் பாடிய பாவலர்களும், அன்னை மரியாளை தெய்வமும் நீயே, சக்தியும் நீயே, இம்மையும் மறுமையும் நீயே, இறைவியே, தேவியே என்று பாடிப் பரவியுள்ளனர். உணர்ச்சிப் பிழம்பாக பாடிய இச்சொற்களை கத்தோலிக்க திருச்சபையின் மரியியலில் உள்ள இறையியல் உண்மைகளின் அடிப்படையில் ஆய்வு செய்ய இயலாது. அது புலவர் மரபு என்று ஏற்றுக் கொள்ளவதே சரி, திருச்சபை மரபு அல்ல.

மீனவனுக்கு கடல் அன்னையின் மடியில் கிடைக்காத பாதுகாப்பும், அபயமும் அன்னை மரியாளின் மடியில் கிடைக்கும் என்னும் உணர்வு இப்பாக்களில் மேலோங்கி நிற்பது காணத்தக்கது :

“சிந்தலை கடலில் சென்றிடும் தோணி
 செய்தொழி லாளர்கள் அந்தோ !
சீரலை குமறிப் பெரும்புயற் காற்றில்
 சேர்துறை தெரி யாமல்
சித்தமே கலங்கும் தருணமே விரைந்துன்
 சேயனை இனிதுமன் றாடி
சிறந்தநல் லுதவி புரிந்தவர் மனதில்
 திடமருள் சமுத்திர ராணி !



கரையும் மறைந்து உன் ஆலயக் கோபுரக்
காட்சியும் மறைந்துஆழ் கடலில்
கலம்விசைப் படகைச் செலுத்திமீன் பிடிப்போர்,
காவல்நீ காலங்கள் யாவும்
கடும்புயற் காற்றில் மின்இடி மழையில்
கலங்கிடும் தருணமே விரைந்து
கருணையோ டெமெக்கு அபயமே தந்து
காத்தருள் அடைக்கலம் நீயே! "

என்று பலவாறு பனிமய அன்னையை கடல் அன்னையோடு இணைத்துப் பாடி 'சிந்தா யாத்திரை மாதா'வாக சிறப்பித்துள்ளனர்.

மரியே வாழ்க !



**தி. சொர்ணராஜன் விக்டோரியா**

**நூல் அறிமுகம்**

# மரியன்னையின் மேன்மைகள்



'மரியன்னை திருத்தலம்' – மரியன்னையின் புனிதர்கள், அடுத்து, 'மரியன்னையின் மேன்மைகள்' – என்ற நூல் வழியாக, அன்னை மரியாவுக்குப் புகழ் சேர்த்துள்ளார் அருள்பணி. குமார்ராஜா அடிகளார்.

சொல் புதிது, சுவை புதிது – என்ற முறையில், புதிய புதிய கோணங்களில் அன்னை மரியாவை மகிமைப்படுத்துகிறார் சொல்லேறுழவர்.

'விவிலியம் காட்டும் மரியா' – 'மரியன்னையின் வெளிப்பாடு' – 'மரியன்னையின் வாழ்வியல் பாடங்கள்' – என்று மூன்று பகுதிகளில், இதுவரை நாம் அறிந்திராத மரியன்னையைப் பற்றிய அரிய தகவல்களைச் சுவையுடன் தந்துள்ளார்.

அன்னை மரியாவைப் பற்றிய ஏராளமான தகவல்களை, இறையியல், மரியியல் கண்ணோட்டத்திலும், இறைமக்கள் எளிதாகப் புரிந்துகொள்ளும் விதத்திலும் வாசித்து வாழ்ந்துகாட்ட உருவாக்கித் தந்துள்ள அரிய நூல்.

மேளாள், தூத்துக்குடி மறைமாவட்ட முதன்மைக்குரு, அருள்பணி. ஜோசப் இரத்னராஜ் அடிகளாரின் குருத்துவ வாழ்வின் பொன்விழாச் சிறப்பு வெளியீடாக இந்நூல் பரிமளிக்கிறது.

**– கலாபன் வாஸ்**

நம் திருஅவை, நமது பெருமை - 13



# தொண்டர் அணிகள்!

**நம் தாய்த் திருஅவையின்** இன்னொரு பெருமை அதன் எண்ணிலடங்கா முழு நேரத் தொண்டரணி. வேறு எந்த மதத்திலும், இயக்கத்திலும், ஏன் பிற சபைகளிலும்கூட இல்லாத ஒரு வலிமையாகக் கத்தோலிக்கத் துறவற சபைகளைச் சொல்லலாம். திருஅவையில் காலங்காலமாக இயங்கி வரும் துறவற சபைகளைத்தாம் "முழு நேரத் தொண்டரணி" என்று பெருமிதத்துடன் அழைக்கிறோம்.

கத்தோலிக்கத் திருஅவை ஆயிரம் பெருமைகளைக் கொண்டதாக இருந்தாலும், அது ஒரு மாந்த நிறுவனம் என்னும் வகையில் தன் வரலாறு முழுவதும் ஆயிரம் சிக்கல்களைச் சந்தித்துள்ளது. இறையருளால் அத்தனைச் சிக்கல்களிலிருந்தும் மீண்டு, பாடம் கற்று, புத்துணர்ச்சியுடன் நடைபோட்டு வருகிறது. அதற்கு இறைவனின் பேரிரக்கமே காரணம். இறைவன் தோற்றுவித்த திருஅவையை இறைவனே வழி நடத்தி வருகிறார்.

ஆனால், இறைவன் தரும் அடையாளங்களை இனம் கண்டு, ஞானத்தோடு திருஅவையை வழிநடத்த வரலாறு முழுவதும் ஏராளமான தலைவர்கள், தொண்டர்கள் தோன்றியுள்ளனர். இவர்களே திருஅவையின் மாபெரும் துறவியர்.

நான்காம் நூற்றாண்டில் கான்ஸ்டன்டைன் பேரரசர் திருஅவைக்கு அரசியல் ஏற்பிசைவும் (அங்கீகாரம்), சலுகைகளும் வழங்கிய பிறகு, ஆன்மீக வாழ்வு தளர்ச்சியடையத் தொடங்கியது. இதனால், ஆன்மீக ஆழத்தை அதிகரிக்க துறவற சபைகள் தொடங்கப் பட்டன.

**பழமையான துறவற சபை.** ஐந்தாம் நூற்றாண்டில் தொடங்கப்பட்ட **பெனடிக்டைன் துறவற சபை**தான் திருஅவையின் மிகப் பழமையான சபை.



புனித பெனடிக்ட் மற்றும் அவரது சகோதரி புனித ஸ்கொலாஸ்டிக்கா இருவரும் தொடங்கிய இச்சபை இன்றளவும் ஆற்றலுடன் செயல்பட்டு வருகிறது. இச்சபையின் துறவிகள்தாம் பின்னர் திருத்தந்தையர்களாகி திருஅவையைத் திறம்பட வழிநடத்தினர். புகழ்பெற்ற பெனடிக்ட் சபை துறவியரில் புனித பெரிய கிரகோரியார், புனித சில்வஸ்டர் உள்ளிட்ட பதினொரு பேர் திருத்தந்தையர் ஆகியுள்ளனர். மேலும், ஏராளமான மறை பரப்பாளர்களையும் இச்சபை உருவாக்கியது.



பதிமூன்றாம் நூற்றாண்டில் புனித பிரான்சிஸ் அசிசியாரால் தோற்றுவிக்கப்பட்ட **பிரான்சிஸ்கன் சபையினர்** இன்று பல்வேறு சபைகளாக வளர்ந்துள்ளனர். எளிமை, கற்பு, கீழ்ப்படிதல் என்னும் மூன்று வார்த்தைப்பாடுகள் கொண்ட துறவு வாழ்வுக்கு புனித பிரான்சிஸ் அசிசி வித்திட்டார். அந்த "பிரான்சிஸ்கன் ஆன்மீகம்" உலகம் முழுவதும் பரவியது.

புகழ்பெற்ற பிரான்சிஸ்கன் துறவியரைப் பட்டியலிட்டால், எண்ணிலடங்காதோர்

தோன்றுவர். புனித பதுவை அந்தோனியார், புனித பொனவெஞ்சர், புனித மாக்ஸ்மிலியன் கோல்பே, புனித பாத்ரே பியோ முதலியோர் அவர்களில் அடக்கம்.



**இயேசு சபை.** புனித **லொயோலா இஞ்ஞாசியாரால்** 1534ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இயேசு சபையினர் இன்று உலகம் முழுவதும் 116 நாடுகளில் பணியாற்றி வருகின்றனர். ஏராளமான கல்வி நிறுவனங்கள், அறிவியல் ஆய்வு, கலைப் பணிகள், மறைபரப்புப் பணிகள் என அனைத்துத் துறைகளிலும் வியத்தகு பங்களித்துள்ளனர். புனித இஞ்ஞாசியாரில் தொடங்கி, புனித சவேரியார், புனித அருளானந்தர், புனித இராபர்ட் பெல்லார்மின், புனித ஜான் பெர்க்மன்ஸ் உள்ளிட்ட ஐம்பதுக்கும் மேற்பட்ட புனிதர்களை உருவாக்கியுள்ளது இச்சபை. நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களே ஒரு இயேசு சபையினர்தாம் (இயேசு சபையின் முதல் திருத்தந்தை) என்பது இச்சபைக்குக் கூடுதல் பெருமை.



**சலேசிய சபை.** பத்தொன்பதாம் நூற்றாண்டில் புனித தொன் போஸ்கோவால் தொடங்கப் பட்ட சலேசிய சபைதான் இன்று உலகிலேயே பெரிய கத்தோலிக்க துறவற சபை. இன்று ஏறக்குறைய 16,000 சலேசியத் துறவிகள் உலகம் முழுவதும் பணியாற்றி வருகிறார்கள்.

கொல்கொத்தா நகர் புனித **அன்னை தெரசாவால்** 1950ஆம் ஆண்டு தொடங்கப் பட்ட மிஷனரிஸ் ஆப் சேரிட்டி துறவிகள் ஐயாயிரத்துக்கும் மேற்பட்டோர் அனாதைகள், வயது முதிர்ந்தோர் மற்றும் குழந்தைகளைப் பராமரிக்கும் உன்னதப் பணியை உலகம் முழுவதும் ஆற்றிவருகின்றனர். தாய்த் திருஅவைக்குப் பெருமை சேர்க்கின்றனர்.



நம் காலத்தில் வாழ்ந்த அன்னை தெரசா திருத்தந்தையருக்கு அடுத்ததாக உலகம் முழுவதும் அறியப்பட்ட ஒரு கத்தோலிக்கராக விளங்கினார். மிக எளிமையாக வாழ்ந்த அவர் எங்கு சென்றாலும் வரவேற்கப்பட்டார். எந்த நாட்டு அதிபரையும், பிரதமரையும் எந்த முன் அனுமதியுமின்றி அவரால் சந்திக்க முடிந்தது என்பது அவர் நமக்குப் பெற்றுத் தந்த மிகப் பெரிய பெருமை. அவரது இறுதிச் சடங்கில் எல்லா நாட்டுத் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

*நோபல் பரிசு வென்ற ஒரே புனிதர்* என்ற பெருமைக்கும் அவர் சொந்தக்காரர். அன்னை தெரசா வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என்பதோடு, அவர் ஒரு கத்தோலிக்கப் புனிதை என்பதிலும் நாம் பெருமை கொள்கிறோம்.

**மாபெரும் தொண்டர் அணி.** இன்றைய நாளில் உலகில் மொத்தம் 828 கத்தோலிக்க துறவற சபைகள் இயங்குவதாக www.catholicdoors.com என்னும் இணைய தளம் தகவல் தருகிறது.

இன்று 721,935 பெண் துறவியரும், 54,140 அருள்சகோதரர்களும், 414, 336 குருக்களுமாக மொத்தம் **11,88,311** முழு நேரத் தொண்டர்கள் உலகம் முழுவதும் சமய, சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள் (காண்க: www.cara.georgetown.sar.com). எந்த நாட்டுக்கும், மதத்துக்கும், சபைக்கும் இல்லாத மாபெரும் பெருமை அல்லவா இது! இறைவனுக்கு நன்றி சொல்வோம்.

**"கிறிஸ் மிலியன்"**

# விவிலியப் போட்டி 96

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

**மத்தேயு நற்செய்தி (அதிகாரம் 3 முதல் 6 வரை)**

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

**கோடிட்ட இடத்தை நிரப்புக :**

1. ஆறாம் அதிகாரத்தில் மூன்றாவது தலைப்பு ........................................
2. ........................................ இருக்கும்போது வெளிவேடக்காரரைப் போல முகவாட்டமாய் இருக்க வேண்டாம்.
3. நீங்கள் ........................................ செய்யும்போது உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும்.
4. உங்கள் பகைவரிடமும் ........................................ கூருங்கள்.
5. இரக்கமுடையோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் ........................................ பெறுவர்.
6. உடனே வானதூதர் வந்து அவருக்கு ........................................ செய்தார்.
7. பலிபீடத்தின் முன் உங்கள் காணிக்கையை வைத்துவிட்டு போய் முதலில் அவரிடம் ........................................ ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.
8. உங்கள் விண்ணகத் தந்தை ........................................ உள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள்.

**(கிடைக்கும் விடைகள் புத்தாண்டில் கடைப்பிடிக்க வேண்டிய நற்செயல்கள்)**

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.01.2023**

## விவிலியப் போட்டி 95

**நவம்பர் 2022** **விடைக்குறிப்புகள்**

**மத்தேயு நற்செய்தி (அதிகாரம் 1 மற்றும் 2)**

| | | |
|---|---|---|
| 1. | யோசேப்பு | மத் 1:19 |
| 2. | பெத்லகேம் | மத் 2:1 |
| 3. | இயேசு | மத் 1:21 |
| 4. | கடவுள் நம்மோடு | மத் 1:23 |
| 5. | மரியா | மத் 1:18 |
| 6. | ஏரோது | மத் 2:8 |
| 7. | ஞானிகள் | மத் 2:11 |
| 8. | விண்மீன் | மத் 2:9 |



**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் :**

**177**

**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் :**

**181**



**விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 181**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து**

**சரியான விடை எழுதியவர்கள் : 110**

**விடை எழுதிய அன்பியங்கள் : 27**

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. செபமாலை மாதா அன்பியம் **கல்யாணி செல்வராஜ்**
2. ஜூடு அன்பியம் **டெரன்சியா அரிஸ்டோ**
3. காவல் தூதர் அன்பியம் **செகரியா இம்மானுவேல்**
4. குழந்தை தெரசா அன்பியம் **திலீபன்**

**பாராட்டுக்குரியவர்கள் : 106**

5\. அருள்சகோ. ரோசம்மாள்

**அந்தோனியார் அன்பியம்**

6\. சரோஜா
7\. பிருந்தா சார்லஸ்
8\. ஜெயா
9\. லூக்காஸ் சகாயம்
10\. ரீனா மொறாயிஸ்
11\. இருதயம்மாள் கபிரியேல்
12\. டெல்பினஸ்

**அன்னை தெரசா**

13\. சுகன் மோனிஷா
14\. சுரேஷ் பிரேமா
15\. ஜூலியஸ் ஜெயரூபி

**அன்னை வேளாங்கன்னி**

16\. டென்சி
17\. ரிஷாலின்
18\. நான்சி
19\. அவிலா
20\. ஆல்வின் மோத்தா

**கிறிஸ்தரசர்**

21\. செலஸ்கி கிளமென்ட்
22\. ரெக்ஸ் கிரீன்வெல்
23\. ஜூலியட் சாவியோ
24\. லூரட் வசந்த்
25\. இவாஞ்சலின்

**தஸ்நேவிஸ் மாதா**

ஒருவருமில்லை

**திவ்யபாலன் அன்பியம்**

26\. பிரின்சி
27\. சகாயராஜ் தனராஜ்

**பாத்திமா மாதா**

28\. ஜஸ்டின் ஸ்நோ குளோரி
29\. ஜெசிந்தா கான்ஸ்டன்
30\. ஸ்டெஃபி ரீகன்
31\. மைக்கேல் ஜெனிட்டா
32\. ராஜா ரீனா
33\. ஆல்வின் அனு

**இரக்கத்தின் மாதா**

34\. இருதயம்மாள் கொன்சால்
35\. சித்ரா மோத்தா
36\. பிரைட்டன் ஜெரோபின்

**ஜெபமாலை மாதா**

37\. சகாயம்மாள் பெனடிக்ட்

**ஜூடு அன்பியம்**

38\. அந்தோனிசாமி
39\. ட்ரைபேனா

**காவல்தூதர்**

40\. வெனிட்டாள்
41\. ஜெயா அகஸ்டின்
42\. சாந்தி ஆல்ட்ரின்
43\. ட்ரினிஷா

**குழந்தை தெரசா**

44\. கிறிஸ்டி லிஸ்டன்
45\. ஷோபனா கோமஸ்
46\. பெனி மொறாயிஸ்
47\. பெர்லி டென்சன்

**குழந்தை இயேசு**

48\. மோனிகா செபாஸ்டின்
49\. எமல்டா
50\. அந்தோனியப்பா பிச்சம்மாள்

**லூர்து மாதா**

51\. ஃபிலோ கோமஸ்
52\. ஜெனோ சேவியர்
53\. ரம்யா
54\. ரோஸ்லின் தாமஸ்
55\. சாண்டினா
56\. ஆலிவர் வி. ராயன்
57\. சகாயராணி
58\. ரஜூலா ஜான்போஸ்கோ

**மணல் மாதா**

59\. கெயிட்டன் ஃபர்னான்டோ
60\. ரொசாரி கோமஸ்
61\. ரொசாரி ரசிகா

**மிக்கேல் அதிதூதர்**

62\. எல்சிட்டா
63\. ஷீபா
64\. இன்ஃபன்ட் ஜோஸ்னா

**பனிமய அன்பியம்**

65\. மெர்சி கோமஸ்
66\. ஜூடு ரதி
67\. சுரேஷ் ஆனி பவுலடியார்
68\. லீமாரோஸ் ஜாய்
69\. ராஜா ரோஸ்லின்
70\. ரஸ்கின் வசந்தா
71\. ஜான்சன் ஒஃபிலியா

**பரிபூரணமாதா**

72\. ஜெனிஷா
73\. மெடோனா

**பொம்பெயி மாதா**

74\. லூடா கான்ஸ்டன்
75\. மாத்யூ கர்டோசா
76\. தெரசா பிரகாஷ்
77\. இம்மாக்குலேட்
78\. டிஃபானி அண்டோ
79\. டயானா கோமஸ்
80\. அந்தோனியம்மாள் மச்சாடோ
81\. போர்ஷியா

**இராயப்பர்**

82\. ஷைனி
83\. நேவிசம்மாள்
84\. டெய்சி

**சவேரியார்**

85\. டெலிலா அமலன்
86\. ஆரோக்கியராஜ் ஹெலினா
87\. ஜோர்னல் ஜென்சி
88\. அனுஷ்யா பீட்டர்
89\. ரூபா மனுவேல்
90\. சகாயம் ஆண்டன்

**செபஸ்தியார்**

91\. ஜெசிலா சேவியர்
92\. அந்தோனியம்மாள் டென்சிங்

**சிந்தாத்திரை மாதா**

93\. நேசம்
94\. ஜூடி ஆரோக்கியராஜ்
95\. டிஜேபிஆர் இராயன்
96\. மெடோனா ஜோசப்

**சிறுமலர் அன்பியம்**

97\. செலஸ்டின்
98\. விஜி சகாயராஜ்
99\. எல்சிற்றா ஆனந்த்

**சூசையப்பர்**

100\. ரூபி கொர்னேலியுஸ்
101\. மென்சி
102\. கிறிஸ் ரிஜோ
103\. ஜூடி ஸ்நோலின்
104\. ஹேமா சேவியர்
105\. மோனிஷா

**திருச்சிலுவை**

106\. சரோலின் கில்டன்
107\. மேரி கிரேட்டா
108\. கயித்தான் ரமணி

**வியாகுல மாதா**

109\. கெலிண்டன்
110\. ராஜா ஐரின்

## II. இதர பங்குகளிலிருந்து விடை அனுப்பியவர்கள் : 71

### பரிசு பெறுபவர்கள் : 4

111. தூத்துக்குடி அந்தோனியார் கோவில் **மென்சிலா லொயோலா**
112. தூத்துக்குடி காந்தி நகர் **ரமேஷ் நர்மதா**
113. திருச்சி **சில்வியா மேரி**
114. பூச்சிக்காடு **மிக்கேல் அருள்ராஜ்**

### பாராட்டுக்குரியவர்கள் : 67

**ஆலந்தலை**
115. ஃபொன்சேகா
116. மரியம்மாள்
117. மேரி லோபோ
118. சகாயராணி
**வீரபாண்டியன்பட்டணம்**
119. ஆன்ட்ரின் சில்வேரா
120. ஷாந்தினி
**ஆறுமுகனேரி**
121. தொம்மை அந்தோனி
**சேதுக்குவாய்த்தான்**
122. ஞானம் பாலசிங்
**புதியம்புத்தூர்**
123. ஹெலன் அன்னமணி
**சென்னை**
124. கமலஜோதி ஜெயசீலன்
125. ஒஃபிலியா தாமஸ்
126. எட்வர்ட்
**பாளையங்கோட்டை**
127. பிரேமா குணசீலன்
128. டெனிசா ஃபர்னான்டோ
129. சுவர்ணா
130. ரோசி
**கயத்தாறு**
131. அமல்ராஜ்
**உரியூர்குப்பம்**
132. சகோ. லெட்டீசியா
**பெரியகுளம்**
133. குழந்தை தெரஸ்
**திண்டுக்கல்**
134. மரிய மதலேன்
135. ஜெர்மேன்
136. ரொசாலி
**கோயம்புத்தூர்**
137. சகோ. லூக்காஸ்
138. ஆஷா தனசீலன்
**பல்லடம்**
139. பிரான்சிஸ் ஆர்லன்
**திருமானூர், கும்பகோணம்**
140. பீட்டர்
**அரக்கோணம்**
141. குமாரி சந்திரசேகர்
**திருச்சி**
142. மோனிட்டா கிறிஸ்டி
143. மேத்யூ விவேக்
144. டோனி
**சேலம்**
145. சூசைராஜ்
**மதுரை**
146. சகோ. அப்போலின்
**வடக்குத்து**
147. ஹென்றிதாஸ்
**பாம்பன்**
148. சுதா
**பரமக்குடி**
149. சீமோன் விமல் சாந்தி

**தூத்துக்குடி நகர பங்குகள்**

**திரு இதயங்களின் பேராலயம்**
150. பெனிட்டா
151. சுசீலன்
152. ரமோலா கமிலஸ்
153. ரிமோல்டா
154. ஜேன் கிளைட்டன்
155. ஜூலியட் வாஸ்
**குருஸ்புரம்**
156. ஆசீர்வாதம்
157. தமிழ்ச் செல்வன்
158. பௌவுசி ஜோ மைக்கேல்
159. டெல்ஃபின்
160. பிளசி செல்வராஜன்
**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
161. சுகிர்தா
**யூதா ததேயு கோவில்**
162. ரோஸ் சேவியர்
163. சகாயராஜ் ரோட்ரிக்ஸ்
**காந்திநகர்**
164. சாந்தினி
165. ரியாலினோ
166. பேபி வால்டர்
167. அன்சிட்டா
168. அனிதா
**லூர்தம்மாள்புரம்**
169. ரெனிஸ்டன் ஜெர்லின்
**சார்லஸ் கோவில்**
170. சகாயிற்றா மச்சாது
**அன்னை வேளாங்கன்னி கோவில்**
171. வினிஃப்ரட் பிரின்ஸ்டன்
172. லிஜியா ஃபர்னான்டோ
173. ஜெசிந்தா ஃபர்னான்டோ
174. செக்கரியா சாமுவேல்
**இஞ்ஞாசியார்புரம்**
175. அற்புத செல்வி
176. சூசை நவீன்
**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
177. விர்ஜின்
178. தயாபர ராணி
**அந்தோனியார் கோவில்**
179. சுஜாதா மகேஷ்
**திரேஸ்புரம்**
180. கோல்வின் ஜேசுராஜ்
**பெத்தனி கான்வென்ட்**
181. சகோ. ஜெமினா

## உங்கள் கவனத்துக்கு

**பனிமய அன்னை பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளுடன் தங்கள் பெயர், அன்பியப் பெயர், குடும்ப அட்டை எண் மூன்றையும் ஒரு தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் சேர்க்கவும். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். பிற பங்குகளைச் சேர்ந்தவர்கள் மட்டும் விரும்பினால் விடைகளை வாட்ஸ்அப்பிலும் இந்த எண்ணுக்கு அனுப்பலாம் :**

**93458 16875** அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

## மாதம் ஒரு மாதா படம் : 36




ஓவியர்
ஜெயராஜ்

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 42)

**சனவரி - 2023**

| | | | |
|---|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : | அருள்முனைவர் குமார்ராஜா | 94431 47823 |
| உதவிப் பங்குத் தந்தை | : | அருள்பணி பால் ரோமன் | 94889 42202 |
| களப் பணியாளர் | : | சகோதரர் பெல் கிளிண்டன் | 9345816875 |
| பங்கு அலுவலகம் | : | | 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| **தினசரி திருப்பலிகள்** | **சனிக் கிழமைகளில்** | | **ஞாயிற்றுக் கிழமைகளில்** | |
|---|---|---|---|---|
| காலை 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | காலை 5.00, 6.30, 8.00 | திருப்பலி |
| மாலை 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை 9.30 | ஆங்கிலத் திருப்பலி |
| | மாலை 5.30 | திருப்பலி | மாலை 5.30 | திருப்பலி |
| | மாலை 6.30 | நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை 6.30 | நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** தினமும் காலை 06.00 - 06.30
சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00

- ✓ திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)
- ✓ புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).
- ✓ திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.
- ✓ ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30
- ✓ திறன் பயிற்சி வகுப்புகள் : ஞாயிறு மாலை 04.30 - 06.00
- ✓ விவிலியப் பாசறை : செவ்வாய் மாலை 06.15 - 08.00
- ✓ அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்
- ✓ கூட்டுத் திருமணம் : 20.08.2023
- ✓ உறுதிப்பூசுதல் அருள்சாதனம் :
- ✓ புதுநன்மை அருள்சாதனம் : 01.01.2023

உறுதிப்பூசுதல் மற்றும் புதுநன்மை அருள்சாதனம் பெறவிரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : காலை 10.00 மணி - 01.00 மணி
  மாலை 04.30 மணி - 05.30 மணி
- ✓ இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே அலைபேசியில் தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.
- ✓ நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம். அலைபேசியில் பேசாமல், நேரிலே வந்துவிடுங்கள்.

## பனிமயச் சுவடுகள்

### (பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)

419. பங்கின் இளம்பெண்கள் மற்றும் விடுதி மாணவியருக்கான "பதின்பருவத்தினரின் சவால்கள்" என்னும் விழிப்புணர்வுப் பாசறை கடந்த **04.12.2022** ஞாயிறு காலை 10.30 முதல் மாலை 04.00 வரை நடைபெற்றது. ஏறக்குறைய 90 பேர் கலந்துகொண்டனர். அரிமா இயக்கத்தின் வழியாக இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ததுடன், பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் சுவையான பகலுணவும் வழங்கிய பங்கின் மைந்தன் திரு. ஆன்செலம் ஜோசப் அவர்களுக்கு நமது பாராட்டுகள்.

420. பேராலயப் பங்கு மேய்ப்புப் பணிக்குழவின் **9ஆவது பொதுக்குழுக் கூட்டம்** 14.12.2022 புதன்கிழமை மாலையில் அந்தோனியார் அரங்கத்தில் நடைபெற்றது. பங்குத் தந்தை, தங்கத் தேர்ப் பணிகளில் இதுவரையில் நடைபெற்றவற்றையும், இனி செய்ய வேண்டிய பணிகளையும் உறுப்பினர்களோடு பகிர்ந்துகொண்டார்.

421. டிசம்பர் மாதத்துக்கான விவிலியப் பாசறை (எண்: 89) 13.12.2022 செவ்வாய் மாலை 06.15க்கு அந்தோனியார் அரங்கத்தில் "விவிலியம் காட்டும் குடும்ப ஆசிகள்" என்ற தலைப்பில் நடைபெற்றது. சில தம்பதியரையும் சேர்த்து மொத்தம் 60 பேர் கலந்துகொண்டனர்.

422. பாலன் பிறப்புக்கான கொடியேற்றம் 16.12.2022 இரண்டாம் திருப்பலி முடிந்ததும் நடைபெற்றது.

423. **"குழந்தைச் செல்வத்துக்காகக் காத்திருப்போருக்கான"** மூன்றாம் சனி நோன்பு வழிபாடு **(26)** 17.12.2022 அன்று நண்பகல் 11.30 முதல் பிற்பகல் 03.00 வரை நடைபெற்றது. இவ்வழிபாட்டில் பல்வேறு பங்குகளிலிருந்து தங்கள் பெயர்களைக் கொடுத்திருந்த 116 தம்பதியருக்காக சிறப்பு மன்றாட்டுகள் ஏறெடுக்கப்பட்டன.

424. இறையடியார் **அந்தோனி சூசைநாதரின் 140ஆவது பிறந்தநாள்** 18.12.2022 அன்று ஞாயிறு இரண்டாம் திருப்பலி முடிந்ததும் பரிசுத்த அமலோற்பவ மாதா வாலிபர் சபையினரால் கொண்டாடப்பட்டது. அனைவருக்கும் கேக் வழங்கப்பட்டது. எளியோருக்கு உதவிகளும், மாணவியருக்கு சீருடைகளும் வழங்கப்பட்டன.

425. பங்கிலுள்ள எளியோருக்கான கிறிஸ்து பிறப்பு விழா 20.12.2022 செவ்வாய் மாலை 07.00 மணிக்கு எஸ்கலின் அரங்கத்தில் நடைபெற்றது. நமது பங்கின் 120 நலிந்த பெண்களுக்குக் கிறிஸ்துமஸ் பரிசாக 5 கிலோ அரிசி, ஒரு மாதா சேலை அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

426. பங்கின் **தம்பதியருக்கான ஆசிர்வாதத் திருப்பலி** 27.12.2022 செவ்வாய் மாலை 05.30க்கு நடைபெற்றது. பொன்விழா, வெள்ளி விழா காணும் தம்பதியரோடு, மற்ற தம்பதியருக்கும் ஆசியும், நினைவுப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

## பங்கில் நிகழ்ந்தவை



### வரவேற்கிறோம்

### 1. திருமுழுக்கு பெற்றவர்கள்

| எண் | குழந்தை | பெற்றோர் | திருமுழுக்கு நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 113. | ஆஸ்டின் ராஜ் ரியான் | சுரேஷ் - டீனா | 25.12.2022 | இரக்கத்தின் மாதா |
| 114. | மரிய அட்ரியன் | ஆக்னல் - திவ்யா | 25.12.2022 | சூசையப்பர் |



### வாழ்த்துகின்றோம்

### 2. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | புதுநன்மை நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 131. | கிரினித் | கெய்ட்டன் - ஷெரின் | 28.12.2022 | மணல்மாதா |
| 132. | கிரிஜித் | கெய்ட்டன் - ஷெரின் | 28.12.2022 | மணல்மாதா |
| 133. | மரிய ஜோசப் ஆன்ஃப்ரோ | ஜான்போஸ்கோ-ரஜூலா | 28.12.2022 | லூர்துமாதா |



### இறைவனைப் போற்றுகிறோம்

### 3. நோயில்பூசுதல் பெற்றவர்கள்

| எண் | பெயர் | உறவினர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 26 | பார்பரம்மாள் | ஜான்சன் | 09.12.2022 | மிக்கேல் அதிதூதர் |
| 27 | ரஞ்சிதம் | கெபிஸ்டன் | 13.12.2022 | சிறுமலர் |



### செபிக்கின்றோம்

### 4. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் | இறந்தநாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 133. | பிரகாசியம்மாள் பெர்னான்டஸ் | சந்தனசாமி | 28.11.2022 | லூர்து மாதா |
| 134. | பவுல் ஃபர்னாண்டோ | ஜெலஸ்டின் | 07.12.2022 | பாத்திமா மாதா |
| 135. | ரஞ்சிதம் | அந்தோணிசாமி | 14.12.2022 | சிறுமலர் |



## நடைபெற இருப்பவை

- ★ **புத்தாண்டு சிறப்புத் திருப்பலி** 01.01.2023 காலை 08.00 மணிக்கு மேதகு ஆயர் ஸ்டீபன் ஆண்டகை அவர்களால் நிறைவேற்றப்படும். குழந்தைகளுக்குப் புதுநன்மை வழங்கப்படும். ஆங்கிலத் திருப்பலியும், மாலைத் திருப்பலியும் நடைபெறா. மாறாக, மாலை 05.30 மணிக்கு நற்கருணை ஆசீரும், குழந்தை இயேசு ஆசீர்வாதமும் நடைபெறும்.
- ★ **முதல் வியாழன் திருமணி ஆராதனை** 05.01.2023 வியாழன் மாலைத் திருப்பலி முடிந்ததும் நடைபெறும். தொடர்ந்து, ஒப்புரவு அருள்சாதனம் வழங்கப்படும்.
- ★ 06.01.2023 **தலைவெள்ளி** அன்று நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.
- ★ 07.01.2023 **முதல் சனி** அன்று மாலையில் சப்பரப் பவனியும், தொடர்ந்து நவநாள் வழிபாடும் நடைபெறும். இவை ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும், சூர்யா, யாழ் தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பப்படும்.
- ★ 21.01.2023 அன்று **மூன்றாம் சனி நோன்பு வழிபாடு (27)** நண்பகல் 12.30 முதல் பிற்பகல் 03.00 வரை "திருமண வரனுக்காகக் காத்திருப்போருக்காக" நடைபெறும்.

### திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

- ★ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும்.
- ★ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசிர், திருப்பலி.

| எண். | நாள் | கிழமை | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|---|
| 110. | 03.01.2023 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | புத்தாண்டு ஆசிகள் |
| 111. | 10.01.2023 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | இறைவனின் வாக்குறுதிகள் |
| 112. | 17.01.2023 | செவ்வாய் | அருள்பணி. கிராசிஸ் | ஆசிகள் பொங்கட்டும் |
| 113. | 24.01.2023 | செவ்வாய் | அருள்பணி. மகிழன் | பவுலின் மனமாற்றம் |
| 114. | 31.01.2023 | செவ்வாய் | அருள்பணி. ஜெரால்ட் ரவி | ஒன்றாயிருப்போமாக! |



# பனிமய சாட்சியம்

**பனிமய சாட்சியம் : 65**

## மாதாவின் மகள், தூத்துக்குடி.



என் மகளுக்கு உடல் நலமில்லாமல் இருந்தது. தாயிடம் விண்ணப்பம் வைத்து வேண்டினேன். அற்புதமாக என் மகளுக்கு சுகம் கிடைத்ததற்கு மாதாவுக்கு கோடான கோடி நன்றி. பனிமய அன்னையே வாழ்க!

**பனிமய சாட்சியம் : 66**



## ரவி – எல்டின், தக்கலை.

குழித்துறை மறைமாவட்டம், தக்கலை அருகேயுள்ள மணலி பங்கைச் சேர்ந்த திரு. ரவி-எல்டின் தம்பதியர் கடந்த மாதம் பங்குத் தந்தையைச் சந்தித்தனர். பனிமயத் தாயின் திருத்தலத்துக்குப் பலமுறை வந்துள்ளதாகவும், இம்முறை தாய்க்கு நன்றிக் காணிக்கை செலுத்த வந்துள்ளதாகவும் தெரிவித்தார்கள். பனிமய அன்னை வழியாகப் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு நன்றியாக ஒரு மாந்தை தைத்து அணிவிக்க விரும்பினார்கள். அவர்களின் விருப்பப்படியே, ஊதா நிறத்தில் புதிய மாந்தை ஒன்று தைக்கப்பட்டு, கடந்த 27.11.2022 திருவருகைக் கால முதல் ஞாயிறு அன்று பனிமய அன்னைக்கு அணிவிக்கப்பட்டது. ரவி-எல்டின் தம்பதியர் தங்கத் தேர்த் திருப்பணிகளுக்காகவும் காணிக்கை தந்து சென்றனர். பனிமய அன்னையின் ஆசீர் இக்குடும்பத்தை நிரப்புவதாக!

**பனிமய சாட்சியம் : 67**

## க்ளாட்வின், லூர்தம்மாள்புரம், தூத்துக்குடி.



லூர்தம்மாள்புரம் பங்கைச் சேர்ந்த திரு. ஸ்டீபன், ராணி தம்பதியரின் மகனான க்ளாட்வின் அண்மையில் பங்குத் தந்தையைச் சந்தித்தார். இருபத்தாறு வயதான க்ளாட்வின் கப்பலில் பணி செய்வதற்கான பயிற்சியை முடித்துவிட்டு, வேலைக்காகக் காத்திருந்தார். ஆண்டுகள் கடந்தபின்னும் வேலை கிடைக்கவில்லை. பனிமய அன்னையிடம் உருக்கமாக மன்றாடினார். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு பனிமய அன்னையின் ஆசியால் வேலை கிடைத்து, பனிமய அன்னையின் பெருவிழா நாளான ஆகஸ்ட் 5 அன்று கப்பலில் ஏறினார். எனவே, அன்னைக்கு நன்றியாகத் தனது சம்பளத்திலிருந்து ஒரு பகுதியைக் காணிக்கையாகத் தந்துள்ளார். பனிமய அன்னையே வாழ்க!

பனிமய சாட்சியம் : 68

## ஸ்டெபி, லயன்ஸ் டவுண், தூத்துக்குடி.



அன்னை மரியாவின் பரிந்துரையால் உடல் நலம் பெற்றதற்கு நன்றியாக அண்மையில் வெள்ளி செபமாலை ஒன்றைப் பேராலயத்துக்குக் காணிக்கையாக வழங்கியுள்ளார். இந்த வெள்ளி செபமாலை கடந்த 28.11.2022 அன்று பேராலய வளாகத்திலுள்ள லூர்து மாதா கெபியிலுள்ள லூர்து அன்னையின் திருவுருவத்திற்கு அணிவிக்கப்பட்டது. மரியே வாழ்க!

பனிமய சாட்சியம் : 69



## செல்வன். இராபின்சன், தூத்துக்குடி.

இஞ்ஞாசியார்புரத்தைச் சேர்ந்த திரு. கிறிஸ்டோபர், திருமதி. வசந்தி தம்பதியர் கடந்த மாதம் பேராலயம் வந்து 2 கிராம் தங்கத்தைப் பனிமய அன்னைக்குக் காணிக்கையாகத் தந்தனர். அவர்களின் மகன் இராபின்சன், வயது 21, படித்து முடித்துவிட்டு வேலை வாய்ப்புக்காகக் காத்திருந்தார். பெற்றோர் பனிமய அன்னையிடம் மன்றாடினர். அன்னையின் பரிந்துரையால் கடந்த அக்டோபர் மாதம் துபாயில் வேலை கிடைத்துள்ளது. எனவே, மகனின் முதல் சம்பளத்தில் இந்தக் காணிக்கையைப் பனிமய அன்னைக்குத் தந்துள்ளனர். மரியே வாழ்க!

பனிமய சாட்சியம் : 70

## திரு. இராஜசெல்வன், காரங்காடு.



குழித்துறை மறைமாவட்டம், காரங்காடு பங்கைச் சேர்ந்த திரு. இராஜசெல்வன், திருமதி. ஜோஸ்பின் விஜி தம்பதியர் கடந்த மாதம் ரூ. 10,000 பெறுமானமுள்ள தங்கப் பொட்டு ஒன்றைப் பனிமய அன்னைக்குக் காணிக்கையாகத் தந்தனர். திருமணமாகி ஆறு ஆண்டுகள் குழந்தையில்லாமலே இருந்த அவர்கள் 2015ஆம் ஆண்டு பனிமய அன்னையின் பேராலயம் வந்து குழந்தைச் செல்வத்துக்காக மன்றாடினராம். என்னே வியப்பு! 2016ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஹேன்ஸ் ஜோஸ்வன் என்னும் மகன் பிறந்தான். இறைவனுக்கும், பனிமயத் தாய்க்கும் நன்றி தெரிவித்தனர். பனிமய அன்னைக்கு நல்லதொரு காணிக்கை வழங்க வேண்டுமென்று காத்திருந்த அவர்கள் தற்பொழுது பேராலயம் வந்து அன்னைக்கு நன்றி செலுத்திவிட்டுச் சென்றனர். குழந்தைச் செல்வம் வழங்கிய பனிமய அன்னையே வாழ்க!

# விண்ணக வாழ்வின் நினைவு அஞ்சலி

"நான் படுத்துறங்கி விழித்தெழுவேன்.
ஏனெனில் ஆண்டவரே எனக்கு ஆதரவு"

(திபா 3:5)



# தொ. பென்சன் பூபால்ராயர்

வயது : 65

மண்ணில் 20.01.1953

விண்ணில் 22.10.2018

எங்களது குடும்பத்தின் ஒளிவிளக்காய்
பாசத்தின் பிறப்பிடமாய் உறவின் வேராய் இருந்த நீங்கள்
நினையாத நேரத்தில் அணைந்து இறைவனிடத்தில் சேர்ந்தீர்கள்.
உங்கள் ஆன்மா இறைவனில் அமைதிபெற எந்நாளும்
உங்களை எங்கள் செபத்தில் நினைத்து வாழ்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவில்

மனைவி : பெ. அமுதா பென்சன்

குடும்பத்தினர்

எண் : 34, கிரகோப் தெரு, தூத்துக்குடி - 628 001.

## விண்ணக வாழ்வின்

# பதினெட்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

**11.01.2023**



# J. அந்தோணிசாமி பர்னாந்து

வயது : 65

பிறப்பு
15.10.1940

இறப்பு
11.01.2005

என்மேல் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்.

**என்றும் உங்கள் நினைவில் வாழும்**

| | | |
|---|---|---|
| மகன் | : | A. ஜாய்சன் |
| மருமகள் | : | J. பமிலா |
| பேத்தி | : | J. ரேச்சல் |

**மற்றும் குடும்பத்தினர்**

# விண்ணக வாழ்வின்
# 2ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

"நேர்மையாளர் தம் தந்தையின் ஆட்சியில் கதிரவனைப் போல் ஒளிவீசுவார்கள்"

(மத் 13:43)



**தாயின் மடியில்**
**03.10.1970**

**இறைவன் மடியில்**
**13.01.2021**

# F. மரியதாஸ் பர்னாந்து

ஊன் கொடுத்து, உயிர் கொடுத்து இறைஞானத்தைப் புகட்டி,
ஆண்டவர் இயேசுவையும் அன்னை மரியாவையும் புகழ்ந்து பாடி,
நித்தமும் வணங்கி அவர்களின் அன்பினில் நனைந்து
நாங்கள் வளர உம் உழைப்பினை எமக்குக் கொடுத்து
இறை அழைப்பிற்கு இனிதே செவிசாய்த்து
இறைப்பதம் சென்று இரண்டு ஆண்டுகள் ஆயினும்
எங்களுக்கு ஆறுதல் சொல்ல ஆயிரம் உறவுகள் இருப்பினும்
உம் இனிய உறவுபோல் உண்டோ...
எங்கள் மனம் எல்லாம் உங்கள் நினைவுகளே...
எங்கள் விழியோரம் கண்ணீர்த் துளிகளே...

**பிரிவால் வாடும்**

**மனைவி : டார்வினா M.**
**மகள் : மேக்டலீனா M.**

SHINY Ph : 98421 31493